செ.வெ.எண்: 07 நாள்:08.07.2022

**நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க (மகளிர் திட்டம்), அலகிற்குட்பட்ட வட்டாரங்களில் காலியாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் (BC) பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

**காலிப்பணியிடங்கள்:**

நாகப்பட்டினம் BC (SMIB), நாகப்பட்டினம் BC(Convergence), திருமருகல் BC (MIS), திருமருகல் BC (Convergence), வேதாரண்யம் BC (SMIB), கீழையூர் BC (Convergence), கீழ்வேளுர் BC (LP), கீழ்வேளுர்BC (MIS).

**வட்டார ஒருங்கிணைப்பாளர்களுக்கான கல்வி மற்றும் இதர தகுதிகள்:**

கல்வித்தகுதி ஏதேனும் ஒரு பாட பிரிவில் பட்ட படிப்பு. Ms-Office குறைந்தப்பட்ச 6 மாத பட்டைய படிப்பு.

வயது 28 வயதிற்குள் இருக்க வேண்டும்.

**முன் அனுபவம் மகளிர் திட்ட பணிகள் குறித்து 2-ஆண்டுகள் முன் அனுபவம். இருப்பிடம் தொடர்புடைய வட்டாரத்தை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி நாள் :12.08.2022 எழுத்து தேர்வு நடைபெறும் நாள்:16.08.2022 நேர்முக தேர்வு நடைபெறும் நாள் :17.08.2022

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

திட்ட இயக்குநர்/இணை இயக்குநர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு (மகளிர் திட்டம்), ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் கட்டட வளாகம், மாவட்ட ஆட்சியரகம், நாகப்பட்டினம்.

**BMM & BC-தேர்வு செய்யப்படும் வழிமுறைகள்:**

காலிபணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விளம்பரம் செய்து பெறப்பட்ட தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு எழுத்து தேர்வு நடத்தி, மாவட்ட தேர்வு குழுவினால் நேர்முக தேர்வு நடத்தி மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்படும். இணைப்பில் காணும் மதிப்பெண்களுக்கான வினா தாள் மகளிர் திட்ட அலுவலக திட்ட இயக்குநரால் தயார் செய்யப்படும். 75 மதிப்பெண்களுக்கு எழுத்து தேர்வு நடத்தி, விடைத் தாள்கள் மாவட்ட தேர்வுக் குழுவால் மதிப்பீடு செய்யப்படும். எழுத்து தேர்வில் 45 மதிப்பெண் (60% of 75 Marks) பெற்றவர்களுக்கு மாவட்ட தேர்வுக் குழுவால் 25 மதிப்பெண்களுக்கு நேர்முக தேர்வு நடத்தப்படும். எழுத்து தேர்வு மற்றும் நேர்முக தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்படுவர். குறைந்தப்பட்சம் 60 மதிப்பெண்கள் பெற வேண்டும்.

தகுதியடைந்தோர் தற்போது நடைமுறையில் உள்ள அரசு இட ஒதுக்கீடு விதிகளுக்குட்பட்டு பணியமர்த்தப்படுவர். பணிநியமன ஆணை தொடர்புடைய வட்டார அளவிலான குழு கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படும். வேலைக்கு அமர்த்தப்படும் பணியாளர்கள் பிரதி மாதம் 11-ம் தேதிக்குள் சுய பணி மதிப்பீட்டு அறிக்கையினை தயார் செய்து மகளிர் திட்ட அலுவலக திட்ட இயக்குநரிடம் ஒப்புதல் பெற வேண்டும். பணியாளர்களின் பணி மதிப்பீட்டறிக்கையின் அடிப்படையிலேயே அடுத்த ஒரு ஆண்டிற்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணியமர்த்தப்படுவர்.

எனவே நாகப்பட்டினம் மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் (மகளிர் திட்டம்) காலியாக உள்ள மேற்கண்ட பணியிடங்களுக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை 12.08.2022 தேதிக்குள் அனுப்பி பயன்பெற மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**